/தனிகவனம்/

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்

ந. க.எண்.3898/ஆ2/2024 நாள்: 02.06.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்–கல்விஉதவித் தொகை–2025–2026 ஆம் கல்வியாண்டு –ப்ரிமெட்ரிக்/போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை–பழங்குடியினர் இன மாணாக்கர்கள் NSP இணையதளத்தில் OTR பதிவு செய்ய அறிவுறுத்தல்– வழிமுறைகள் தெரிவித்தல்–சார்பு.

பார்வை: மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/503/2025 நாள்: 02.05.2025

---------

வேலூர் மாவட்டம், 2025–26ஆம் கல்வியாண்டில் ப்ரிமெட்ரிக்/போஸ்ட் மெட்ரிக் கல்விஉதவித் தொகை வழங்கும் திட்டத்தில், NSP (National Scholarship Portal) இணையதளத்தில் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு OTR (One Time Registration) ஒரு முறை பதிவு செய்தல், தற்போது பழங்குடியினர் நல அமைச்சகத்தால் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நடப்பு கல்வியாண்டில் ப்ரிமெட்ரிக்/போஸ்ட் மெட்ரிக் கல்விஉதவித் தொகை திட்டத்தில் பழங்குடியினர் மாணாக்கர்கள் பயன்பெறும் பொருட்டு ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் பொறுப்பு ஆசிரியரை நியமனம் செய்து மாணவ/மாணவியர்களுக்கு NSP இணையதளத்தில் 16.06.2025ஆம் தேதிக்குள் OTR (ஒரு முறைப் பதிவு) பணிகளை முடிக்க வேண்டும். மாணவர்களுக்கான OTR பதிவு நிறைவடைந்த பின் அவர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு பெறப்படும் OTR எண் மற்றும் கடவுச்சொல் போன்ற விவரத்தை ப்ரிமெட்ரிக்/போஸ்ட் மெட்ரிக் கல்விஉதவித் தொகைக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு அலுவலக கோப்பாக பராமரிக்க அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்/தாளாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

NSP இணையதளத்தில் OTR பதிவு மேற்கொள்ள வழிகாட்டும் காணொளிகள் மற்றும் செயலிகளின் இணைப்புகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது .

இணைப்பு:

1. காணொளி–2.
2. NSP மற்றும் ஆதார் FaceAuth செயலி இணைப்பு.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்/தாளாளர்
அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

Scanned with OKEN Scanner